# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இலங்கை றோயல் ஏசியாட்டிக் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2006, நவெம்பர் 17 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

## 2006 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இலங்கை றோயல் ஏசியாட்டிக் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்

[2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. (கூட்) 6/2005

### 1992 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை றோயல் ஏசியாட்டிக் சங்க (கூட்டிணைத்தல்) சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

மற்றைய விடயங்களுக்கிடையில் கூட்டுத்தாபனம் தனது நடவடிக்கைகளைப் பயன்தரு முறையிலும், சனநாயக அடிப்படையிலும் கொண்டு நடாத்துவதற்கும், கூட்டுத்தாபன சபையும் தமது நடவடிக்கைகளைத் திறமையாகவும் தடங்கலின்றியும் மேற்கொள்வதற்கு ஏதுவாகவும், கால மாற்றத் தேவைகளுக்கும், சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் பொருந்தக் கூடியவாறு தேவைகளை ஏற்படுத்திச் செல்வதற்கு ஏதுவாகவும் அரசியலமைப்பின் சட்டவிதிக்கூறுகளை மாற்றுவதற்கு அது அவசியமாயிருக்கின்றதாதலாலும் :

மேலே குறிப்பிடப்பட்ட தேவைகளை வழங்குவதற்கு றோயல் ஏசியாட்டிக் சங்கச் சட்டத்தில் தேவையான திருத்தங்களை ஏற்படுத்துவதற்கும் அத்தகைய திருத்தங்களைப் பயனுள்ள முறையில் ஏற்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்டிருப்பதாலும் அத்தகைய திருத்தங்களை பயனுறச் செய்வது உசிதமானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :—

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2006 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இலங்கை றோயல் ஏசியாட்டிக் சங்க (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை றோயல் ஏசியாட்டிக் சங்கத்தின் பிரிவு 4(1) ஐ திருத்தம் செய்தல்.

**2.** இலங்கை றோயல் ஏசியாட்டிக் சங்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு பின்வருவனவற்றைப் பதிலிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் கூட்டுத்தாபனத்தால் தெரிவு செய்யப்பட்ட ஏனைய அங்கத்தவர்கள் என்பவர்களை உள்ளடக்கிய சபையினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகள்

மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பதவிதாங்குனர்களைக் கொண்டமைந்த பேரவை ஒன்றினாலும் ".

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்